சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண்.1 திருச்சிராப்பள்ளி
(மோட்டார் வாகன விபத்து நட்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்)

**எம்.சி.ஓ.பி. எண். 955/2020**

**எ.ம.சா. – 1**

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 2 ம் நாள் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) Gr.I. Bench Clerk Tmt.R.Jegadeeshwari என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவலிங்கம் | தொழில் | |
| தந்தை/ கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | கிராமம் | |

**முதல் விசாரணை**

நான் ஸ்ரீ பெரும்புதூரில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் டிரைவர் ஆக வேலை பார்த்து வருகிறேன். 29.02.2020 ஆம் தேதி டி என் 48 ஏ ஜே 8215 என்ற வாகனத்தை நான்தான் ஓட்டினேன். அன்று பாடாலூரிலிருந்து வெங்கனூர் போவதற்காக ஜல்லி லோடு ஏற்றிக்கொண்டு போய் வெங்கனூர் பாலம் பக்கத்தில் லோடு இறக்கும்போது, சூப்பர்வைசர் மோகன்குமார் குடிக்க தண்ணீர் கேட்டார். நான் கேபினில் தண்ணீர் இருக்கிறது. எடுத்து தருகிறேன் என்று சொன்னேன். அவர் என்னை லோடு இறக்க சொல்லிவிட்டு, அவராக போய் தண்ணீர் எடுத்து குடித்துவிட்டார். அவர்தான் லோடு இறக்கும்போது சைடு பார்த்து சொன்னார். அப்போது எதிர்பாராத விதமாக மின்கம்பியில் டிப்பர் பட்டு சாக் அடித்ததில் மோகன்குமார் சம்பயிடத்திலேயே

இறந்துவிட்டார். இந்த விபத்திற்கு நான் காரணம் இல்லை. தண்ணீர் குடித்துகொண்டே என்னை, டிப்பரை அவர் தூக்க சொன்னதன்பேரில்தான், நான் டிப்பரை தூக்கினேன். விபத்துக்கு நான் பொறுப்பு இல்லை. என் மீது வழகது தவறாக பதிவு செய்துவிட்டார்கள். அந்த வழக்கு அரியலூர் நீதிமன்றத்தில் நடந்து என்மீது தவறில்லை என்று விடுதலை செய்துவிட்டார்கள். அந்த தீர்ப்பு நகலை சா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்கிறேன்.

**குறுக்குவிசாரணை(மனுதாரர் தரப்பில்)**

1ம் எதிர்மனுதாரர் எஸ்.எஸ் கன்ஸ்ட்ரக்சனில் நான் 12 வருடம் வேலை செய்தேன். 1ம் எதிர்மனுதாரர் ரோடுபோடும் காண்டிராக்ட் எடுத்திருந்தார்.

1ம் எதிர்மனுதாரரிடம்தான் இறந்துபோனவர் சூப்பர்வைசர்ஆகவும்,நான் டிரைவர் ஆகவும் வேலை செய்தோம் என்றால் சரிதான். எங்கள் வண்டியில் டிரைவர் மட்டும்தான். கிளீனர் இல்லை. நான்தான் கிளீனர் வேலையும் சேர்த்து பார்க்கவேண்டும் என்றால் சரிதான். நான் லோடு இறக்கப்போன இடத்தில்தான் இறந்துபோனவர் சூப்பர்வைசராக வேலை பார்த்துகொண்டிருந்தார் என்றால் சரிதான். நான் இறங்கி மின்கம்பி போவதை பார்த்திருந்தால்,அந்த இடத்தில் நிறுத்தி டிப்பரை மேலே தூக்கி லோடை கொட்டியிருக்கமாட்டேன். கொஞ்சம் தள்ளி நிறுத்தியிருப்பேன் என்றால் சரிதான். நான் இறங்கி பார்க்காததால்தான் டிப்பர் மின்கம்பியில் பட்டு விபத்தானது என்றால் சரியல்ல. இந்த விபத்து டிரைவர் என்ற முறையில் என் வேலையை நான் சரியாக செய்யாததாலும், கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடந்தது என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் நடந்திருப்பதால் 1,2 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

குற்றவியல் நீதிமன்றத்தில் சந்தேகத்தின் பலன்கள்தான் கொடுக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டேன் என்றும்அந்த தீர்ப்பு இந்த நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சாட்சியம் அளித்ததை
தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு
தட்டெழுத்தரால்கணிணியில்தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்குபடித்துக்காண்பிக்கப்பட்டு,அவரால்சரிஎன்று
ஒப்புக்கொள்ளப் பட்டு, அவரது கையொப்பம்
பெறப்பட்டது.

Sd./Tmt.C.Karthika
சிறப்பு மாவட்ட நீதிபதி ,
திருச்சிராப்பள்ளி